தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# இயற்கை முறையில் சிறிய வெங்காய சாகுபடி பயிற்சி

First Published : 03 Jul 2011 04:08:19 PM IST

பெரம்பலூர், ஜூலை 2: பெரம்பலூர் அருகேயுள்ள அம்மாபாளையம், லாடபுரம் பகுதி விவசாயிகளுக்கு இயற்கை முறையில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்வது குறித்து அண்மையில் களப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உயிரி தொழில்நுட்பவியல் துறை மற்றும் பெரம்பலூர் வட்டார வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு தலைமை வகித்து வேளாண் உதவி இயக்குனர் எம். செந்தமிழ்ச்செல்வன் பேசியது:

குறுகிய காலத்தில் கிடைக்கும் பணப் பயிர்களில் முக்கியமானது சிறிய வெங்காயம், பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 7 ஆயிரம் எக்டேரில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது.

வெங்காய சாகுபடியில் விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகளில் மிகவும் முக்கியமானது பூச்சி நோய் மேலாண்மை மற்றும் சத்து பற்றாக்குறை. எனவே, எந்தப் பயிர் சாகுபடி செய்தாலும் மண் பரிசோதனை செய்வது மிகவும் அவசியம் என்றார் அவர்.

வெங்காய சாகுபடி தொழில்நூட்பம் குறித்து தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரி பயிர் நோய் இயல் நிபுணர் க. முத்துகிருஷ்ணன் பேசியது:

இயற்கை எதிர் உயிரிணி பூசனம் டிரைக்கோடெர்மா விரிடி, உள்பூசணம் மற்றும் ஆடோமோனாய் பசு சாணம் உள்ளிட்டவைகளைக் கொண்டு, விதை நேர்த்தி செய்து நடுவதால் தண்டு, வேர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலை உண்ணும் புழுக்களைக் கட்டுப்படுத்த தாவரப்பூச்சி விரட்டிகளையும், நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்த வேண்டும்.

ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் அதிகம் காணப்படும் கோழிக்கால் சீக்கு, கீழ்த்தண்டு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, டிரைக்கோடெர்மா விரிடி, 5 லிட்டர் கோமியம், 5 கிலோ சாணம் ஆகியவற்றைக் கலந்து, நன்றாக வடிகட்டி ஒட்டும் திரவத்துடன் வெங்காயத் தாள்கள் நன்கு நனையுமாறு காலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் 15 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த, ஆடோமோனாஸ் (0.6 சதம்) 500 கிலோவை 100 லிட்டர் நீரில் கலந்து ஒட்டும் திரவத்துடன் தெளிக்க வேண்டும்.

வளர்ச்சிப் பருவத்தில் அமிர்தக் கரைசல், பஞ்சகவ்யம், தேங்காய் மோர் கரைசலில் ஏதாவது ஒன்றை 20 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

அறுவடைக்கு 15 நாள்களுக்கு முன்னர் 100 லிட்டருடன், 5 லிட்டர் புளித்த மோரைக் கலந்து தெளித்தால் காய் திரட்சி மற்றும் நிறத்துடன் இருப்பதோடு, எடையும் அதிகரிக்கும் என்றார் அவர்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் சேமிப்புத் தொழில்நுட்பம், கிடங்கு அமைக்கும் முறை குறித்து விளக்கப்பட்டது.

பயிற்சி முகாமில் வேளாண் அலுவலர் பச்சையம்மாள், துணை வேளாண் அலுவலர் மணிவேல், வேளாண் உதவி அலுவலர் சுரேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தோட்டக்கலைத் துறை திட்டங்களில் பயன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 03 Jul 2011 04:06:52 PM IST

பெரம்பலூர், ஜூலை 2: பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் விவசாயிகள் பங்கேற்று பயன் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஷ் அஹமது:

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் 2011-2012-ம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

அதனடிப்படையில், பெரம்பலூர் மாவட்டத்தில், புதிய தோட்டம் அமைத்தல் திட்டத்தின் கீழ் பழப் பயிர்கள், பல்லாண்டுப் பயிர்களாகிய மா அடர் நடவுக்கு ஹெக்டருக்கு ரூ. 24 ஆயிரம், இரண்டாம் ஆண்டு பராமரித்தலுக்கு ரூ. 8 ஆயிரம், மா இயல்பான நடவுக்கு ரூ. 9 ஆயிரத்து 900, இரண்டாம் ஆண்டு பராமரித்தலுக்கு ரூ. 3 ஆயிரத்து 300, ஆண்டுப் பயிர்களான வாழை மற்றும் கிழங்கு வகைகளுக்கு ஹெக்டருக்கு ரூ. 16 ஆயிரத்து 875, திசு வாழைக்கு ரூ. 31 ஆயிரத்து 202 என மொத்தம் ரூ. 57 லட்சத்து 36 ஆயிரத்து 900 மானியம் வழங்கப்படுகிறது.

இதேபோல, பல்பஸ் ரக மலர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ. 45 ஆயிரம் என 75 எக்டர் அளவுக்கும், நறுமணப் பயிர்களான மிளகாய், மஞ்சள் மற்றும் வெங்காயத்துக்கு எக்டர் ஒன்றுக்கு தலா ரூ. 12 ஆயிரத்து 500 என மொத்தம் 340 எக்டருக்கும், மலைத்தோட்டப் பயிரான முந்திரி இரண்டாம் ஆண்டு பராமரித்தலுக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ. 4 ஆயிரம் என மொத்தம் 378 எக்டருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ. 71 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பில் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், நிலப்போர்வைக்கு ரூ. 10 ஆயிரம் என 50 எண்ணிக்கைக்கு ரூ. 5 லட்சம், விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கான மாவட்ட, உள்மாநில, வெளிமாநில பயிற்சிகளுக்காக ரூ. 5

லட்சத்து 91 ஆயிரத்து 300, அறுவடைக்கு பின் செய் நேர்த்தியின் கீழ், சிப்பம் கட்டும் அறைகளுக்காக ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம், மாவட்ட அளவிலான கருத்தரங்குக்கு ரூ. 2 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் பல்வேறு இனங்களில் சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் பயன்பெறவும், அரசு விதிகளின்படி, பெண்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் சிறுபான்மையினர்களுக்கும் உரிய முன்னுரிமை வழங்கப்படுகிறது. எனவே, தகுதியுடைய விவசாயிகள் தங்களது நிலம் தொடர்பான சிட்டா, அடங்கல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், குடும்ப அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண் உதவி அலுவலர்களை அணுகி விவரங்களைத் தெரிந்துகொண்டு பயன்றெலாம்.

இதுதொடர்பாக மேலும் விவரங்களுக்கு தோட்டக்கலைத் துணை இயக்குநர், வெங்கடாசலபதி நகர், புதிய பேருந்து நிலைய வடபுரம், பெரம்பலூர்- 621 212. தொலைபேசி எண்- 04328-291099 செல்போன் எண்- 9487156511, தோட்டக்கலை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், பெரம்பலூர். செல்போன்- 8925164128, தோட்டக்கலை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், ஆலத்தூர். செல்போன் எண்- 9150017351, தோட்டக்கலை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், வேப்பூர். செல்போன் எண்- 9486311707, தோட்டக்கலை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், வேப்பந்தட்டை. செல்போன் எண்- 9486311707 உள்ளிட்ட என்களில் தொடர்புகொள்ளலாம் என்றார் அவர்.

**நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தல்**

First Published : 03 Jul 2011 01:27:22 PM IST

பெரியகுளம், ஜூலை 2:÷பெரியகுளம் அருகே உள்ள மேல்மங்கலத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக் கோரி மேல்மங்கலம் நெடுங்குளத்துப்புரவு விவசாயிகள் நலச் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியருக்கு வெள்ளிக்கிழமை மனு அளிக்கப்பட்டது.

÷விவசாயிகள் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:÷பெரியகுளம் அருகே உள்ள மேல்மங்கலம், வடுகபட்டி, அழகர்நாயக்கன்பட்டி, நல்லகருப்பன்பட்டி, ஆகிய பகுதிகளில் வராகநதி ராஜவாய்க்கால் பாசனம் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

÷இப்பகுதியில் உள்ள விவசாயிகள் கடன் வாங்கியும், நகைகளை அடமானம் வைத்தும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் நெல்லுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.
÷தற்போது 15 நாள்களில் நெல் அறுவடை தொடங்க உள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். இதனால், இடைத்தரகர்கள் மூலம் நெல் விற்பனையில் ஈடுபட்டு நஷ்டம் அடைவதைத் தடுக்க முடியும்.
இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்

**"லேசான கருவிகளால் நிலத்தை சமன் செய்யலாம்'**
First Published : 03 Jul 2011 04:36:05 PM IST

செய்யாறு,ஜூலை 2: லேசான கருவிகளால் நிலத்தை சமன் செய்து விவசாயிகள் பயன் பெறலாம் என வேளாண்மை அறிவியல் விஞ்ஞானி ரமேஷ் ராஜா கூறினார்.
செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆத்மா திட்டத்தின்கீழ் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில், அவர் பேசியது:
நிலத்தை சமன் செய்யும் லேசான கருவி வரப் பெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்தி, விவசாயப் பணியை மிக எளிதாக செய்யலாம். திசு வளர்ப்பு முறையில் தோட்டப் பயிரான வாழையை பயிரிடலாம் என்றார்.
தொடர்ந்து, கால்நடை பராமரிப்பு, தீவன உணவுகள் தயாரித்தல், கால்நடைகளுக்கு வரும் நோய்கள், தடுக்கும் முறைகள் குறித்து கால்நடை துறை விஞ்ஞானி கணேஷ்குமார் பேசினார்.
பின்னர் விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாற அதற்கான கையாளும் முறைகள் குறித்து விதைசான்று உதவி இயக்குநர் பேபிபர்வதமும், மண் ஆய்வின் பயன்கள் குறித்து வேளாண்மை அலுவலர் பிரபாவதியும், திருந்திய நெல் சாகுபடி குறித்து துணை வேளாண்மை அலுவலர் நாகேந்திரனும் பேசினர்.
நிகழ்ச்சிக்கு செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை வகித்தார்.
கூட்டத்தில் கலந்துகொண்ட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

தினமலர்

**தேக்கமடைந்த தேங்காய் அழுகும் நிலை : தென்னை விவசாயிகள் கலக்கம்**

ஜூலை 04,2011,00:02



பரமத்திவேலூர்: தேங்காய் விலையேற்றத்தால், வட மாநில வியாபாரிகள் இதர மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்ததால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதோடு, தேக்கமடைந்துள்ள கோடிக்கணக்கான தேங்காய்கள், அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் அதன் சுற்றுவட்டார கிராமங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில், தென்னை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு செயல்படும், 20க்கும் மேற்பட்ட கமிஷன் மண்டிகளில், தேங்காய் தேவையைப் பொறுத்து விலை நிர்ணயிக்கப்படும்.அங்கிருந்து சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களுக்கு தேங்காய் அனுப்பி வைக்கப்படுகிறது. தவிர, நாள்தோறும் 50 லோடு தேங்காய், நாமக்கலில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, மும்பைக்கு லாரியில் கொண்டு செல்லப்படுகிறது. கடந்த சில தினங்களாக, பெரியதேங்காய், ஏழு ரூபாய், பொடித் தேங்காய், இரண்டு ரூபாய் என, மும்பைக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆந்திரா, கர்நாடக மாநிலங்களிலிருந்து, பெரிய ரக தேங்காய், ஆறு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.அதனால், அங்குள்ள வட மாநில வியாபாரிகள், ஆந்திரா, கர்நாடக மாநில தேங்காயை வாங்குகின்றனர். இதனால், இரு தினங்களில் மட்டும் இங்கிருந்து, மும்பை உள்ளிட்ட வட மாநிலங்களுக்குச் செல்லும் கோடிக்கணக்கான தேங்காய், தேக்கம் அடைந்துள்ளது.மட்டை உரித்த நாளிலிருந்து, 20

நாட்களுக்குள் பயன்படுத்த முடியும் என்பதால், தேங்காய் அழுகி, தென்னை விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இப்பிரச்னையால், மரத்தில் இருந்து புதிதாக காய்களையும் பறிக்க முடியவில்லை. இதே நிலை நீடித்தால், வரும் வாரங்களில் தேங்காய் விலை, மேலும் சரிவடைய வாய்ப்புள்ளது.

### 3,000 பருத்தி மூட்டைகள் ரூ.40 லட்சத்துக்கு விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,01:41 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 3,000 பருத்தி மூட்டைகள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனை நடந்தது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடக்கும். நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், தம்மம்பட்டி, ஆகிய சுற்றுவட்டார கிராமப்பகுதி மற்றும் பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, நைனார்பாளையம் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள், 3,000 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதன்படி, பி.டி., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,111 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,130 ரூபாய்க்கும், டி.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,869 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,417 ரூபாய்க்கும் விற்பனையானது.நேற்று நடந்த ஏலத்தில், 3,000 பருத்தி மூட்டைகள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

### மழைநீர் சேகரிப்பு பணி முடிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,02:50 IST

தர்மபுரி: பாசன கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்தின் கீழ், நபார்டு வங்கி மூலம் மானியம் பெற்ற விவசாயிகள், தங்கள் கிணற்றுக்கு அருகே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணியை விரைந்து முடிக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. கலெக்டர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் நபார்டு வங்கியில், பாசன கிணறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்ட விவசாயிகள் கடன் பெற்று, நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கான பணிகளை முடிக்காமல் உள்ளனர். இந்த திட்டத்தின் கீழ், வங்கியில் கடன் பெற்ற விவசாயிகள், 15 நாட்களுக்குள் கிணற்றுக்கு அருகில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புப் பணியை முழுமையாக முடிக்க வேண்டும். பணியை முடித்து அதன் விபரத்தை தர்மபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள பொதுப்பணித்துறை,

நிலநீர் நிலவியல், உபகோட்ட அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும். பணியினை செய்யத் தவறும் விவசாயிகளிடமிருந்து தங்களுக்கு வழங்கப்பட்ட தொகையை, 9 சதவிகித தனி வட்டியுடன் அரசு சட்டப்படி வசூலிக்க நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**மாங்கனி கண்காட்சியில் இன்றைய நிகழ்ச்சிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,02:45 IST

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரியில் நடந்து வரும் அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் இன்று (ஜீலை 4ம் தேதி) தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடக்கிறது. * மாலை 3 மணிக்கு தோட்டக்கலை துறை மறறும் பையூர் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு. ஏற்பாடு: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பையூர். * மாலை 5 மணிக்கு கிருஷ்ணகிரி கிரிஷ்லேண்ட் பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள். ஏற்பாடு பள்ளி கல்வித்துறை. * மாலை 6 மணிக்கு தெருக்கூத்து கலைநிகழ்ச்சிகள். ஏற்பாடு சேலம் கலை பண்பாட்டு துறை மற்றும் தஞ்சாவூர் தென்னக கலை பண்பாட்டுத் துறை.
* இரவு 7 மணிக்கு பாரதி ரமேஷ் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள். ஏற்பாடு மாங்கனி விழா குழுவினர். * இரவு 8 மணிக்கு டேன்ஜரஸ் பாய்ஸ் குழுவினரின் நடனநிகழ்ச்சி. ஏற்பாடு மாங்கனி விழா குழுவினர். * இரவு 9 மணிக்கு சுகராகம் இன்னிசை கச்சேரி. ஏற்பாடு: மாங்கனி விழா குழுவினர்.

**மானிய விலையில் உரம் விற்பனை வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,02:38 IST

ஓசூர்: ""ஓசூர் தாலுகாவில் அனைத்து வகைபயிர் விதைகள் மற்றும் சாகுபடிக்கு தேவையான உரங்கள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது, " என வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் தாலுகாவில் தற்போது மானாவாரி பயிர்களில் விதைப்பு துவங்கி உள்ளது. குறிப்பாக ராகி, நெல் உள்ளிட்ட பல்வேறு பயிரு வகைகளை விவசாயிகள் ஆர்வமாக சாகுபடி செய்யும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். இந்த பயிறு வகைகளுக்கான விதைகள் மற்றும் சாகுபடிக்கு தேவையான அனைத்து வகை உரங்கள் மானிய விலையில் ஓசூர் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ராகி பயிரில் உயர் விளைச்சல் தரக்கூடிய ரகங்களான ஜி.பி.யு.28., எல்-5, எம்.ஆர்-1 ஆகிய ராகி விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. நெல் பயிரில் வெள்ளை பொன்னி மற்றும் ஏ.டி.டி.39., ஆகிய உயர் விளைச்சல் தரும் நெல் விதைகள் ஒருங்கிணைந்த

தானிய அபிவிருத்தி திட்டத்தில் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் மானிய விதையிலும், விதை கிராம திட்டத்தில் 50 சதவீதம் மானிய விலையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. துவரை, காராமணி போன்ற பயிர் வகைகளில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் கிலோ ஒன்றுக்கு 12 ரூபாயும், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டதட்தில் கிலோ ஒன்றுக்கு 8 ரூபாயும், விதை கிராம திட்டத்தில் 50 சதவீதம் மானிய விலையிலும் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. பசுந்தாள் உர விதையான சணப்பு விதைகள், உயிர் உரங்களார ரைசோபியம் மற்றம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவை 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நிலக்கடலை பயிறு வகைகள் மற்றும் நெல் பயிர்களுக்கு தேவையான ஜிப்சம் 50 சதவீதம் மானிய விலையிலும் வழங்கப்படுகிறது. நெல் பயிருக்கு தேவையான அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்து உரம், ஜிங்சல்பேட் ஆகியவை 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் மானிய விலையில் வேளாண்மை துறை மூலம் வழங்கப்படும், பயிறு வகை விதைகள், உரங்களை பெற்று அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**மழைநீர் சேகரிப்பு பணி முடிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,02:46 IST

தர்மபுரி: பாசன கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்தின் கீழ், நபார்டு வங்கி மூலம் மானியம் பெற்ற விவசாயிகள், தங்கள் கிணற்றுக்கு அருகே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணியை விரைந்து முடிக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. கலெக்டர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் நபார்டு வங்கியில், பாசன கிணறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்ட விவசாயிகள் கடன் பெற்று, நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கான பணிகளை முடிக்காமல் உள்ளனர். இந்த திட்டத்தின் கீழ், வங்கியில் கடன் பெற்ற விவசாயிகள், 15 நாட்களுக்குள் கிணற்றுக்கு அருகில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புப் பணியை முழுமையாக முடிக்க வேண்டும். பணியை முடித்து அதன் விபரத்தை தர்மபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள பொதுப்பணித்துறை, நிலநீர் நிலவியல், உபகோட்ட அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும். பணியினை செய்யத் தவறும் விவசாயிகளிடமிருந்து தங்களுக்கு வழங்கப்பட்ட தொகையை, 9 சதவிகித தனி வட்டியுடன் அரசு சட்டப்படி வசூலிக்க நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**மாவு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள்: உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2011,02:42 IST

ராசிபுரம் : "மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, ஒட்டுண்ணிகள் விட வேண்டும்' என, நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், தற்போது சாகுபடி செய்துள்ள மரவள்ளி பயிரில், மாவுப்பூச்சி மற்றும் செம்பேன் தாக்குதல் உள்ளது. மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த, சந்தியூர், ஏத்தாப்பூர் வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் லத்துவாடி கால்நடை மருத்துவக் கல்லூரி வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றில், ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள், அந்தந்த பகுதி வேளாண் அறிவியல் நிலையத்தில் தங்கள் பெயர், சர்வே எண் ஆகியவற்றை பதிவு செய்து, ஒட்டுண்ணிகளைப் பெற்று, தங்கள் வயல்களில் விட்டு, மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தலாம். ஒட்டுண்ணிகளை விட்டபின், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கக் கூடாது. பூச்சி தாக்குதல் அதிகம் இருந்தால், டைமெதோயேட் 30 சதவீதம், இ.சி., மருந்து 3 மி.லி., மற்றும் அசாராக்டின் ஒரு மி.லி., ஆகியவற்றை, ஒரு லிட்டர் தண்ணீர் என்கிற விதத்தில் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். முதல் தெளிப்பில் இருந்து, 10 அல்லது, 15 நாட்களுக்கு பின், ப்ரோணேபாஸ் 50 சதவீதம், இ.சி., என்ற மருந்து இரண்டு மி.லி., ஒரு லிட்டர் தண்ணீர் என்கிற விகிதத்தில் கலந்து, 200 லிட்டர் கரைசலை தயார் செய்து, ஒட்டும் திரவத்தை கலந்து செடி, தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வரப்பில்லா சாகுபடி செய்ய முன் வாருங்கள் : விவசாயிகளுக்கு கலெக்டர் அட்வைஸ்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,23:38 IST

கடலூர் : விவசாயிகள் அதிக லாபம் பெற வரப்பில்லா சாகுபடி செய்ய முன் வரவேண்டும் என கலெக்டர் பேசினார்.
சிதம்பரம் அடுத்த ஓடாக்கநல்லூரில் உழவர் மன்ற திறப்பு விழா நடந்தது. நபார்டு உதவி பொது மேலாளர் ராஜகோபாலன் தலைமை தாங்கினார். வேளாண்துறை துணை இயக்குனர் சந்திரமோகன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் அசோகன் முன்னிலை வகித்தனர். உழவர் மன்றத் தலைவர் கீர்த்திவர்மன் வரவேற்றார்.

உழவர் மன்றத்தை திறந்து வைத்து கலெக்டர் அமுதவல்லி பேசியதாவது: நாட்டில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தி திறனை அதிகப்படுத்த வேண்டியது அவசியம். இதுபோன்ற உழவர் மன்றங்கள் மூலம் உற்பத்தி திறனை அதிகப்படுத்த விவசாயிகள் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் ஆள் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை போன்ற பிரச்னைகளை சமாளிக்கும் வகையில், குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் வகையில் 75

முதல் 100 ஏக்கர் வரை வரப்பில்லாமல் சாகுபடி செய்யக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளிடையே ஒற்றுமை நிலவும். உற்பத்தி அதிகப்படுத்துவதால் இடுபொருள் மற்றும் உர தேவை குறையும். உழவர் மன்றங்கள் இதுபோன்ற சாகுபடியை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

புலியங்குடி கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக லாபம் அடைந்துள்ளார். இதனை அனைத்து விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். இவ்வாறு கலெக்டர் அமுதவல்லி பேசினார். விழாவில் மாவட்ட உழவர் மன்றங்கள் கூட்டமைப்பு தலைவர் ரவீந்திரன், உழவர் மன்றத் தலைவர்கள் கார்மாங்குடி வெங்கடேசன், விஜயகுமார், வேல்முருகன், ரவிச்சந்திரன், குஞ்சிதபாதம், ராமலிங்கம் உள்ளிட்டோர் வாழ்த்திப்பேசினர்.

**கருந்தலை புழுவை கட்டுப்படுத்த வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:29 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்னையில் வேகமாக பரவி வரும் கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்த, வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் மகேஸ்வரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரகாசம், வேளாண் இணை இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:

ராமகவுண்டர்: மாவட்டத்தில் உள்ள மூன்று நெல் கொள்முதல் நிலையங்களிலும் தற்போது குறைந்த அளவே நெல் கொள்முதல் நடக்கிறது. இதனால், மாவட்டத்தில் தற்போது, 15 லட்சம் மூட்டை நெல் தேக்கமடைந்துள்ளது. நாள் தோறும் நெல் கொள்முதல் செய்யும் அளவை அதிகரிக்க வேண்டும்.

ருக்குமணி (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்): கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், கால்வேஅள்ளி ஆகிய நெல் கொள்முதல் நிலையங்களில், தினம், இரண்டு லட்ச ரூபாய் அளவுக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. விவசாயிகள் தரம் குறைந்த நெல்லை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இவ்வாறு தரம் குறைந்த நெல், பொது விநியோக

திட்டத்துக்கு உபயோகபடுத்த முடியாத நிலையில், கொள்முதலின் அளவை குறைக்க மேலதிகாரிகள் உத்தரவிட்டு தரம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய உத்தரவிட்டுள்ளனர். நெல் கொள்முதலின் அளவை அதிகரிக்க அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

மாதன்: தென்னையில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், ஆயிரக்கணக்கான ஏக்கரில் மரங்கள் கருகி வருகிறது. இதை கட்டுப்படுத்த வேளாண் துறை போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜன் (வேளாண் இணை இயக்குனர்): தென்னையை தாக்கி வரும் கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்துதல் குறித்து, ஆழியாறில் உள்ள தென்னை வளர்ச்சி வாரிய விஞ்ஞானிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. விரைவில் விஞ்ஞானிகள் மாவட்டத்துக்கு வருகை புரிந்து நோய் பாதித்த பகுதிகளில், ஒருங்கிணைந்த நோய் தடுப்பு முறைகளை கையாண்டு கருந்தலை புழுக்களை அழிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஏற்கனவே விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணன்: மாவட்டத்தில், தனியார் மாம்பழக்கூழ் உரிமையாளர்கள் சின்டிகேட் அமைத்துக்கொள்வதால், மாவின் விலை வெகுவாக குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர். எனவே, அரசு சார்பில் மாவட்டத்தில் மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும். மேலும், மாவுக்கு குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும்.

கலெக்டர் மகேஸ்வரன்: இது குறித்து அரசுக்கு ஏற்கனவே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. அரசு பரிசீலித்து உரிய நடவடக்கை எடுக்கும்.

ஸ்ரீதர்: கிருஷ்ணகிரி மாவட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் பயிர் கடன்கள் விவசாயிகளுக்கு அதிக அளவில் வழங்க வேண்டும். நகை கடன் வாங்கும் விவசாயிகளுக்கு உர மூட்டைகள் வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

கலெக்டர் மகேஸ்வரன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பாண்டில் பயிர் கடன் வழங்க, 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பரவலாக பயிர் கடன் வழங்கப்பட்டு வருகிறது. வங்கிகளில் விவசாய தேவைக்கு நகை கடன் வாங்கும் போது அரசின் உத்தரவுபடி உர மூட்டைகள் வழங்கப்படுகிறது. இருப்பினும் அரசுக்கு இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**கி.கிரி மாவட்டத்தில் கன மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:30 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி, பர்கூர், போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்ததால் வானம் பார்த்த பூமியில் எள் விதைத்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கடுமையான வெப்பக்காற்று வீசி வந்தது. மாவட்டத்தில் குறிப்பாக வானம் பார்த்த பூமி அதிகம் உள்ள போச்சம்பள்ளி, மத்தூர், பர்கூர், கிருஷ்ணகிரி ஆகிய சுற்றுவட்டார பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் எள் விதைத்திருந்தனர். எள் பயிர் வளர்ந்து பூக்கள் பூக்கும் வேளையில் மழை பெய்யாததால் பல இடங்களில் எள் பயிர் வாடி வந்தது.

நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. பல இடங்களில் குறிப்பாக போச்சம்பள்ளி, பாரூர், மத்தூர், கிருஷ்ணகிரி பகுதியில் இரவு முழுவதும் மழை பெய்ய துவங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரபடி மாவட்டத்தில் அதிக பட்சமாக தளியில் 50 மி.மீ., மழை பதிவானது. இதனை தொடர்ந்து போச்சம்பள்ளி 47.4, கிருஷ்ணிகிரி 45.4, பாரூர் 44.2, பெனுகொண்டாபுரம் 32, நெடுங்கல் 27.2, சூளகிரி 15, அஞ்செட்டி மற்றும் தேன்கனிக்கோட்டை 14, ராயக்கோட்டை 9 மி.மீட்டர் மழை பதிவானது. இதில் குறிப்பாக வானம் பார்த்த பூமியான போச்சம்பள்ளி, பெனுகொண்டாபுரம், பாரூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதால் வாடியிருந்த எள் பயிர் நன்றாக வளரும் என்பதால் இந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். போச்சம்பள்ளி அடுத்த பொடார் கிராமத்தில் இடி மின்னலுடன் நேற்று முன்தினம் இரவு மழை பெய்த போது மின்னல் தாக்கி மாது என்பவருக்கு சொந்தமான பசு மாடு இறந்தது.

**சொட்டு நீர்ப்பாசனத்துக்கு 100 சதவீதம் மானியம் : மகசூல் அதிகரிக்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:39 IST

ஈரோடு: தமிழகத்தில் சொட்டு நீர்ப்பாசனத்துக்கு அளிக்கப்படும் மானியத்தை, 100 சதவீதமாக்க முதல்வர் முடிவெடுத்துள்ளார். இதனால், விவசாயிகளுக்கு உரச்செலவு குறைவதுடன், 30 சதவீதம் தண்ணீர் சேமிக்கவும், மகசூல், 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. வேளாண் அமைச்சர் மற்றும் துறை அதிகாரிகளுடன், முதல்வர் ஜெயலலிதா சமீபத்தில் ஆலோசனை நடத்தினார். அப்போது, திருந்திய நெல் சாகுபடி முறைக்கு அதிக முக்கியத்துவம்

அளிக்க உத்தரவிட்டார். சொட்டு நீர்ப் பாசனத்துக்கு, 100 சதவீதம் மானியம் அளிக்க முடிவு செய்து, அது தொடர்பான தகவல்களை கேட்டுள்ளார். "தேசிய நுண்ணீர் பாசன இயக்கம்' என்ற பெயரில் செயல்பட்டு வரும் இத்திட்டத்தில் வேளாண் பயிர்களான கரும்பு, தென்னை, தோட்டக்கலைப் பயிர்களான மஞ்சள், கொய்யா, மரவள்ளி உள்பட அனைத்து பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் அளிக்கப்படுகிறது.
சிறு, குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் பங்காக, 50 சதவீதம், மாநில அரசின் பங்காக, 25 சதவீதம் என, 75 சதவீதம் வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு மத்திய அரசின் பங்காக, 40 சதவீதம், மாநில அரசின் பங்காக, 25 சதவீதம் என, 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்ப் பாசனத்தில் செடிக்கு நேரடியாக தண்ணீர் விடப்படுகிறது. அதனால், 30 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. உரத்தை தண்ணீரில் கரைத்து சொட்டு நீர்ப்பாசனம் மூலம் செடிகளுக்கு கிடைப்பதால், உரம் வீணாவது குறைகிறது. தண்ணீர் செடிக்கு மட்டுமே செல்வதால், மற்ற இடங்களில் களைகள் முளைப்பது கட்டுப்படுத்தப்படுகிறது. விவசாயிக்கு செலவு குறைகிறது. மகசூல், 20 சதவீதம் வரை அதிகம் கிடைக்கிறது. உதாரணமாக, ஒரு ஏக்கரில் கரும்பு, 50 டன் விளைந்தால், சொட்டு நீர்ப்பாசனம் பயன்படுத்தினால், 60 முதல், 65 டன் வரை மகசூல் அதிகமாக கிடைக்கிறது. தமிழகத்தில் தற்போது உணவு உற்பத்தி, 100 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கிறது. இந்தாண்டு, 115 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாகுபடி பரப்பளவு ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வரும் நிலையில், சொட்டு நீர்ப்பாசனம் முழு அளவில் செயல்படுத்தும்போது, 20 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி கூடுதலாக கிடைக்கும். மேலும், 30 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்படும். அதை வைத்து பாசன வசதி பெறும் நிலப்பரப்பை அதிகப்படுத்தவும் முடியும். "சொட்டு நீர்ப்பாசன திட்டத்துக்கு, 100 சதவீதம் மானியம் அளிப்பதில் முதல்வர் ஜெயலலிதா மிகுந்த ஆர்வமுடன் உள்ளார்' என, வேளாண் அமைச்சர் செங்கோட்டையனும் தெரிவித்துள்ளார். அதற்குரிய நிதி ஒதுக்குவது பட்ஜெட்டின் போது தெரியவரும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கலப்படத்தால் கொப்பரை விலையில் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,00:58 IST

பொள்ளாச்சி : தேங்காய் எண்ணெயில் "பார்ம்கர்னல்' எண்ணெயை கலப்படம் செய்வதால் வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை சரிந்துள்ளது. இதனால், விவசாயிகளும், வியாபாரிகளும் கொப்பரையை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 25ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 63 - 65 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,415 - 1,420 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 98

ரூபாயிக்கு விற்றது. விவசாயிகள் பறித்து உரித்த தேங்காயை டன்னுக்கு 16,000 - 17,000 ரூபாய் விலை கிடைத்தது. உணவு தேவைக்கு அனுப்பும் தேங்காய் டன்னுக்கு 16,000 ரூபாயிக்கு விலை போனது. இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 10 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்ள ஒரு தேங்காய்க்கு 8.50 - 9.00 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 55 -57 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,200 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 83 ரூபாயாக இருந்தது. பொள்ளாச்சி, உடுமலை பகுதியிலிருந்து சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பும் உரித்த தேங்காய் டன்னுக்கு 15,500 ரூபாய் விலை கிடைத்தது. விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 16,000 - 16,500 ரூபாய் விலை கிடைத்தது. தென்னந்தோப்புகளில் விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 9.00 - 9.25 ரூபாயும், வியாபாரிகள் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 7.50 - 8.50 ரூபாயும் விலை கிடைத்தது.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், தேங்காய் எண்ணெயில் "பார்ம்கர்னல்' எண்ணெயை கலப்படம் செய்வதால், தேங்காய் எண்ணெய் தேக்கமடைந்து விலை சரிந்துள்ளது. தேங்காய் எண்ணெய் விலை சரிந்ததால் கொப்பரை, தேங்காய் விலை சரிந்து விட்டது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை கிலோவுக்கு 8.00 ரூபாயும், தேங்காய் எண்ணெய் டின்னுக்கு 220 ரூபாயும் விலை சரிந்துள்ளது. இதனால், தென்னை விவசாயிகளும், வியாபாரிகளும் தேங்காயை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர்

**தக்காளி விலை உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:03 IST

பொங்கலூர் : தக்காளி விலை உயர்வால், பொங்கலூர் பகுதி விவசாயிகள் உற்சாகத்தில் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் கோடை வெப்பம் அதிகமாக காணப்படும் பங்குனி, சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் தக்காளி விலை உச்சத்தில் இருக்கும். இந்த சீசனில் பூக்கள் உதிர்வதாலும், தக்காளி வளர்ச்சி பாதிக்கப்படுவதாலும் ஏற்படும் உற்பத்தி குறைவே இதற்கு காரணம். இந்தாண்டும் தக்காளி விலை உயரும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர்; ஆனால் வழக்கத்துக்கு மாறாக விலை குறைந்தது. உள்ளூர் விளைச்சல் பாதிக்கப்பட்டாலும், வெளிமாவட்டங்களில் தக்காளி விளைச்சல் அமோகமாக இருந்ததால் விலை உயரவில்லை. கடந்த மாதம் வரை 5.5 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 35 முதல் 40 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தில் சற்று விலை உயர்ந்து 50 ரூபாயை தொட்டது; தற்போது

கூடை 75 ரூபாய் வரை தக்காளி விலை உள்ளது; சில்லறை விலையில் கிலோ 16 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தக்காளி விலை உயர்வால், விவசாயிகள் உற்சாகம் அடைந்து உள்ளனர்.

**குன்னூர் பழப்பண்ணையில் "பெர்சிமன்' பழ சீசன் ஜோர்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:14 IST

குன்னூர் : குன்னூர் சிம்ஸ்பூங்கா பழப்பண்ணையில், "பெர்சிமன்' பழ சீசன் துவங்கியுள்ளது. குன்னூர் சிம்ஸ்பூங்காவில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், பேரி, ஆரஞ்சு, பீச், பிளம், எலுமிச்சை, லிச்சி உட்பட ஏராளமான பழ வகை மரங்கள் உள்ளன. இதில், அரிய வகை "பெர்சிமன்' பழ மரங்களும் உள்ளன. இம்மரங்களில் தற்போது சீசன் துவங்கியுள்ளது. ஆஸ்திரேலியாவை தாயகமாக கொண்ட இப்பழம், ஜப்பான் நாட்டின் தேசிய பழமாகவும் உள்ளது. இப்பழத்தில், வைட்டமின் "ஏ' மற்றும் "பி' சத்துகள் நிறைந்துள்ளன. இவைகள், மற்ற பழங்களை போல், மரத்திலேயே பழுப்பதில்லை. மாறாக, காயாக பறிக்கப்பட்டு, "எத்தனால்' என்ற திரவத்தில் ஊற வைத்த பின், இரு நாட்கள் கழித்து பழுக்கும். "இப்பழங்கள் மற்றும் பழ மர நாற்றுகள், தோட்டக்கலைப் பண்ணையில் விற்கப்படுகின்றன' என, தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறினர்.

**பழங்கள் விற்பனை உரிமை ரூ.7 லட்சத்துக்கு ஏலம் போனது**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:07 IST

குன்னூர் : குன்னூர் பர்லியார் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், மருத்துவ குணம் நிறைந்ததாக கூறப்படும் துரியன், மங்குஸ்தான் பழங்களை சாகுபடி செய்யும் உரிமை ஏலம் விடப்பட்டது; குத்தகைக்கு எடுப்பதில் போட்டி அதிகரித்ததால், ரூ.7 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. நீலகிரி மாவட்டம் குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலை இடையேயுள்ள பர்லியார் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், பலா, பேரி, மங்குஸ்தான், துரியன், லிச்சி உட்பட பல அரிய வகை பழ மரங்கள் உள் ளன. குழந்தை பாக்கியம் தரும் மருத்துவ குணத்தை கொண்டுள்ளதாக கூறப்படும் துரியன், சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்ததாக கூறப்படும் மங்குஸ்தான் பழங்களின் சீசன் தற்போது துவங்கியுள்ளது. குறிப்பாக, துரியன் பழங்களை முன்பதிவு செய்து வாங்கிச் செல்கின்றனர்.

பண்ணையில் உள்ள 28 துரியன், 79 மங்குஸ்தான் பழ மரங்களில் உள்ள பழங்களை அறுவடை செய்து, விற்பனை செய்யும் உரிமை, குன்னூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் மணி

முன்னிலையில், தனியாருக்கு ஏலம் விடப்பட்டது. பலரும் ஆர்வம் காட்டியதால், 16 பேர் ஏலத்தில் பங்கெடுத்தனர். இதில், இரு வகை மரங்களில் உள்ள பழங்களை அறுவடை செய்து விற்பனை செய்யும் குத்தகையை, பர்லியார் பகுதியை சேர்ந்த ராமதாஸ் என்பவர், 7 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கு எடுத்தார்.

**சோளம், துவரை பயிரிட்டால் மானியம்; அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,01:27 IST

கரூர்: தாந்தோணி வட்டாரத்தில் சோளம் மற்றும் துவரை பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் 5,000 ரூபாய் மான்யத்தில் வழங்கப்படும்' என வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் தென்மேற்கு பருவ காலங்களில் ஜூன்-ஜூலை மாதங்களிலும், வடகிழக்கு பருவமழை காலங்களில் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் சோளம் மானாவாரியாக விதைப்பு செய்யப்படுகிறது. தற்போது தென்மேற்கு பருவ மழை தொடங்கும் தருவாயில் உள்ளது. இதனால் சோளம் மற்றும் துவரை பயிரிடும் விவசாயிகளுக்கு மானாவாரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உரங்கள், பூச்சி மருந்துகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டங்கள் போன்ற வேளாண் இடுபொருட்கள் 5,000 ரூபாய் மான்யத்தில் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் 150 ஹெக்டேர் பரப்பளவுக்கு சோளம் மற்றும் துவரை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு தாந்தோணி வேளாண்மை அலுவலகம் மற்றும் வேளாண்மை அலுவலகத்தை நேரிலோ அல்லது 04324-255225 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறித்து தமிழகம் முழுவதும் கணக்கெடுப்பு : வேளாண் உற்பத்தியை இரட்டிப்பாக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,03:25 IST

மதுரை : தமிழகத்தில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் பொருட்டு, வேளாண் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் திட்டம் செயல்வடிவம் பெற்றுள்ளது. இதற்காக, மாநிலம் முழுவதும் விவசாயிகள் பற்றிய கணக்கெடுப்பு தீவிரமாக
நடக்கிறது. முழு விவரப் பட்டியலை 15 நாட்களுக்குள் அரசுக்கு அனுப்பும்படி

உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் சில ஆண்டுகளாக விலைவாசி உயர்வு கடுமையாக இருந்தது. வெங்காயம் கிலோ 100 ரூபாய், தக்காளி கிலோ 70 ரூபாய் என காய்கறி விலை "ஜெட் வேகத்தில்' எகிறியது. கடுமையான விலை உயர்வால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வெங்காயத்திற்கு பதிலாக முட்டைகோஸ், தக்காளிக்கு பதிலாக புளியை சேர்த்து சமைக்க பெண்கள் கற்று கொண்டனர். சாம்பார் என்பதையே பலர் மறக்க வேண்டியதாயிற்று.

பருவமழை கைகொடுக்காததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாய வேலைக்கும் ஆட்கள் கிடைக்கவில்லை. சிறிய தொகையை "அட்வான்சாக' கொடுத்து விவசாயிகளிடம் இருந்து விளை நிலங்களை வாங்கி, ரியல் எஸ்டேட் உரிமையாளர்களால், பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு, அதிக விலைக்கு விற்கப்பட்டன. ரியல் எஸ்டேட் கும்பல்களிடம் நிலத்தை பறிகொடுத்த விவசாயிகள் பஞ்சம் பிழைக்க வழியின்றி இடம் பெயர்ந்தனர். ஒடியா, ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களில் குறைந்த ஊதியத்திற்கு முறுக்கு சுடும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் :விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் பொருட்டு, வேளாண் உற்பத்தியை இரட்டிப்பாக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, மாநிலம் முழுவதும் விவசாயிகள் கணக்கெடுப்பு பணிகள், வேளாண் உதவி இயக்குனர்கள் தலைமையில் தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயி பெயர், தந்தை பெயர், முகவரி, மொபைல் எண், சொந்த நிலம் அல்லது குத்தகை நிலம், நிலத்தின் விஸ்தீரனம், விவசாயத்தில் எத்தனை ஆண்டு முன்அனுபவம், குடும்ப பின்னணி, விவசாய கூலி அல்லது விவசாயம் சார்ந்த மாற்று தொழில், மண் ஆய்வு மூலம் மண்ணின் தன்மை, பயிரிடப்படும் பயிர் வகைகள், மானாவாரி விவசாயம் அல்லது சொட்டு நீர் பாசன விவசாயம், அரசிடம் எதிர்பார்க்கும் சலுகை, வேளாண் உற்பத்தியை பெருக்கும் யோசனை உள்ளிட்ட முழு விவரங்கள் சேகரிக்கப்படும்.

விவசாயிகளுடன் நேரடி தொடர்பு : தமிழகம் முழுவதும் விவசாயிகளின் முழு விவரப்பட்டியலை 15 நாட்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும் என, உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும்.
அப்போது, மாவட்டம், வட்டம், கிராமம், விவசாயி ஆகியோருக்கு "கோடு' (குறியீடு) எண் வழங்கப்படும். உதாரணத்திற்கு மதுரையின் "கோடு' எண் "7', வட்டத்தின் "கோடு' எண் "7ஏ', கிராமத்தின் "கோடு' எண் "7பி', விவசாயியின் "கோடு' எண் "7சி' என, "கோடு' எண்கள் வழங்கப்படும். மதுரையில் உள்ள ஒரு விவசாயியின் "கோடு' எண்ணை கம்ப்யூட்டரில் பதிவு செய்தால், அந்த விவசாயியின் முழு விவரம் தெரியும். விவசாயிகள் தங்களுக்கு தேவையான சலுகைகளை பெற, வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் அல்லது அருகாமையில்

உள்ள கம்ப்யூட்டர் பிரவுசிங் சென்டர்களுக்கு சென்று தங்களது "கோடு' எண்ணை குறிப்பிட்டு புகார் தெரிவிக்கலாம். அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஓரிரு நாளில் அரசிடம் இருந்து தகவல் தெரிவிக்கப்படும். விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் வேளாண் உற்பத்தியை பெருக்க, இதுபோன்று விவசாயிகள் பற்றிய தகவல் தொடர்பு அவசியம் என அரசு கருதுகிறது. பல்வேறு விவசாய வளர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்த இது அடிப்படையாக அமையும்.

**காபி விற்பனை கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,21:32 IST

தாண்டிக்குடி : காபி விற்பனையில் தர மேலாண்மை என்ற கருத்தரங்கு, தாண்டிக்குடி மத்திய காபி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. சர்வதேச அளவில் காபி கொள்முதல் செய்யும் "ஈ காம்' நிறுவனம், பெங்களூரு பிரக்ருதி டிரஸ்ட் இணைந்து நடத்தின. காபி ஆராய்ச்சி நிலைய துணை இயக்குனர் ஸ்ரீதரன் தலைமை வகித்தார். காபி வாரிய மண்டல ஆலோசனைக் குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் வரவேற்றார். "ஈ காம்' நிறுவன மேலாளர்கள் தர்மஜா, தயா விற்பனைப்பிரிவு மேலாளர்கள் சோமசேகர், ரத்தினராஜா முன்னிலை வகித்தனர். பிரக்ருதி டிரஸ்ட் பிரபாகரன், சிவக்குமார், காபி விரிவாக்க தொடர்பு அதிகாரிகள் அய்யப்பன், சக்தி, முன்னோடி விவசாயி மோகனசுந்தரம் கலந்து கொண்டனர். விவசாயிகள் காபி தளிர் விற்பனைக்கு சான்றிதழ் பெற உதவுவது, தரமான காபி உற்பத்திக்கு ஆலோசனை வழங்குவது குறித்து விளக்கப்பட்டது.

**எஸ்.புதூர் வட்டாரத்தில் வேளாண்மை முன்னோடி திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,21:48 IST

சிங்கம்புணரி : எஸ்.புதூர் வட்டாரத்தில் இரண்டாவது பசுமைப்புரட்சி முன்னோடி திட்டம் செயல் படுத்த சிறு,குறு விவசாயிகளிடம் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. விவசாயிகள் தற்போதுள்ள சாகுபடி முறையை மாற்றி புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சாகுபடி செய்யும் திறனை பத்து சதவீதம் அதிகரிக்க செய்தல்,நெல்,சோளம்,கம்பு,பயறு வகைகள் சாகுபடியை இரு மடங்காக்குதல்,எண்ணெய் வித்து பயிர்களை 50 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக அதிகரித்தல், சிறு, குறு விவசாயிகள் நீர் பாசன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை 30 சதவீதம் அதிகரிப்பதற்கான விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மேலும் விபரம் அறிய எஸ்.புதூர் வேளாண்மை வளர்ச்சி மைய உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு உதவி இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் 9.35 லட்சம் மரக்கன்றுகள் வழங்க திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2011,21:50 IST

சிவகங்கை : ""நடப்பாண்டு மாவட்டத்தில், 9.35 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்," என, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் எஸ்.இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறுகையில்,""தேவகோட்டையில் 200 ஏக்கர், நேமத்தில் 90 ஏக்கரில் தோட்டக்கலை பண்ணை செயல்படுகிறது. இவ்விரு பண்ணைகளில் நடப்பாண்டு 1.44 லட்சம் மா ஒட்டு கன்றுகள், 4.50 லட்சம் முந்திரி, 1.75 லட்சம் மல்லிகை பூ பதியன், மரக்கன்றுகள், அலங்கார செடிகள் 31 ஆயிரம், தேக்கு மரக்கன்றுகள் 10 ஆயிரம், கொய்யா, கருவேப்பிலை, பப்பாளி 1.50 லட்சம் என, 9.35 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட உள்ளது. மெண்தண்டு ஒட்டு முறையில் ஒரு லட்சம் மா கன்றுகள் அறிமுகப்படுத்தப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் 2,675 எக்டேர் புதிய பரப்பிலும், தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், துல்லிய பண்ணைய திட்டம், தேசிய விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 300 எக்டேரில் பயிரிட வீரிய கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.
இத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலை பண்ணைக்கு 29.33 லட்ச ரூபாய் வரை லாபம் கிடைக்கும்," என்றார். உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரன் உடனிருந்தார்.

**குன்னூர் பழப்பண்ணையில் 'பெர்சிமன்' பழ சீசன் ஜோர்**

ஜூலை 03,2011,15:50




குன்னூர் : குன்னூர் சிம்ஸ்பூங்கா பழப்பண்ணையில், 'பெர்சிமன்' பழ சீசன் துவங்கியுள்ளது. குன்னூர் சிம்ஸ்பூங்காவில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில், பேரி, ஆரஞ்சு, பீச், பிளம், எலுமிச்சை, லிச்சி உட்பட ஏராளமான பழ வகை மரங்கள் உள்ளன. இதில், அரிய வகை 'பெர்சிமன்' பழ மரங்களும் உள்ளன. இம்மரங்களில் தற்போது சீசன் துவங்கியுள்ளது. ஆஸ்திரேலியாவை தாயகமாக கொண்ட இப்பழம், ஜப்பான் நாட்டின் தேசிய பழமாகவும் உள்ளது. இப்பழத்தில், வைட்டமின் 'ஏ' மற்றும் 'பி' சத்துகள் நிறைந்துள்ளன. இவைகள், மற்ற பழங்களை போல், மரத்திலேயே பழுப்பதில்லை. மாறாக, காயாக பறிக்கப்பட்டு, 'எத்தனால்' என்ற திரவத்தில்

ஊற வைத்த பின், இரு நாட்கள் கழித்து பழுக்கும். 'இப்பழங்கள் மற்றும் பழ மர நாற்றுகள், தோட்டக்கலைப் பண்ணையில் விற்கப்படுகின்றன' என, தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறினர்.

**காபி ஏற்றுமதி பன்மடங்கு அதிகரிப்பு : உள்நாட்டில் கையிருப்பு குறைந்தது**

ஜூலை 03,2011,01:49



பெங்களூரு : சர்வதேச சந்தைகளில் காபிக்கு தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், இதன் விலையும் உயர்ந்துள்ளது. இதை நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி, ஏற்றுமதியாளர்கள், காபியை ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதையடுத்து, உள்நாட்டில் காபி கையிருப்பு, குறைந்து வருவதாக, பெங்களூரைச் சேர்ந்த காபி உற்பத்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

காபி பருவம் என்பது, அக்டோபர் முதல் செப்டம்பர் வரை கணக்கிடப்படுகிறது. இவ்வகையில், நடப்பு காபி பருவத்தில், அக்டோபர் முதல் மார்ச் வரையிலான, ஆறு மாத காலத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, 28.90 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை= 60 கிலோ) மிகவும் அதிகரித்துள்ளது. இது, கடந்த காபி பருவத்தின் இதே 6 மாதங்களில், 17.40 லட்சம் மூட்டைகளாக இருந்தது. ஆக, இது, 65 சதவீதம் அதிகமாகும்.

இது குறித்து காபி வாரியத்தின் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், 'சர்வதேச சந்தையில், காபிக்கான தேவை அதிகரித்து, ஏற்றுமதி உயர்ந்துள்ளதால், கையிருப்பில் உள்ள காபியின் அளவு குறைந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, நடப்பாண்டு தொடக்கத்தில், காபி கையிருப்பு 1.30 கோடி மூட்டைகளாக மிகவும் குறைந்திருந்தது. இது, கடந்தாண்டு இருந்த கையிருப்பை விட, 36.7 சதவீதம் குறைவாகும்' என்று தெரிவித்தார்.

நடப்பு காபி பருவத்தில் இதுவரையிலுமாக, உள்நாட்டில் காபி உற்பத்தி, 2.99 லட்சம் டன்னாக உள்ளது. இதில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி, 2.84 லட்சம் டன்னாக உள்ளது. ஆக, இதுவரை, மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியில், 80-85 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தின் முதல் ஆறு மாத காலத்தில், இந்தியா மட்டுமின்றி, உலகளவில் அதிக காபி

உற்பத்தி செய்யும் 11 முன்னணி நாடுகளின் காபி ஏற்றுமதியும் உயர்ந்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட 11 நாடுகளின் காபி ஏற்றுமதி, 5.29 கோடி மூட்டைகளாக மிகவும் அதிகரித்துள்ளது. இது, கடந்த பருவத்தின், இதே ஆறு மாத காலத்தில், 4.58 கோடி மூட்டைகளாக இருந்தது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில், எத்தியோப்பியாவின் காபி ஏற்றுமதி, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 104 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இதைத் தொடர்ந்து, இந்தியாவின் காபி ஏற்றுமதி 65 சதவீதம் உயர்ந்துள்ளது.

மேலும்,கொலம்பியா (36 சதவீதம்), ஹோண்டுராஸ் (31 சதவீதம்),பெரு ( 28 சதவீதம்), பிரேசில் (19 சதவீதம்), வியட்நாம் (12 சதவீதம்) ஆகிய நாடுகளின் காபி ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.

சென்ற மார்ச் மாதம் வரையிலான ஓராண்டு காலத்தில், உலக நாடுகளின் காபி ஏற்றுமதி, 10.10 கோடி மூட்டைகளாக அதிகரித்துள்ளது. இது, இதுவரை இல்லாத சாதனை அளவாகும்.

சர்வதேச காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், சர்வதேச அளவில் காபிக்கு தேவை உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற மே மாதத்தில், உலகளவில், காபி ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட, 16 சதவீதம் அதிகரித்து 92 லட்சம் மூட்டைகளாக, உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில், 79 லட்சம் மூட்டைகளாக இருந்தது.

நடப்பு 2011ம் ஆண்டு, ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான 6 மாத காலத்தில், இந்தியாவின் காபி ஏற்றுமதி, கடந்தாண்டு, இதே காலத்துடன் ஒப்பிடும் போது 44 சதவீதம் அதிகரித்து 2.20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

உலகளவில், காபி உற்பத்தியில், இந்தியா 5வது இடத்தில் உள்ளது. இது, உலக உற்பத்தியில், 4.5 சதவீதமாகும். இருப்பினும், இந்தியா அதன் மொத்த காபி உற்பத்தியில், 70-80 சதவீதத்தை ஏற்றுமதி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு 2011-12ம் காபி பருவத்தில், உலகளவில், காபி உற்பத்தி, 13.50 கோடி மூட்டைகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில், பிரேசில், வியட்நாம், கொலம்பியா ஆகிய நாடுகளில், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி சிறப்பாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த 2010 - 11ம் பருவத்தில், இருந்த உற்பத்தியை விட, நடப்பு காபி பருவத்தில் இதன் உற்பத்தி 29 லட்சம் மூட்டைகள் குறைவாக இருக்கும் என்ற மதிப்பீடும் உள்ளது. இதற்கு,

பிரேசில் நாட்டில், அராபிகா வகை காபி உற்பத்தி குறையும் என்ற நிலைப்பாடுதான் காரணம். பிரேசில் நாட்டின் ரோபஸ்டா காபி உற்பத்தி, 18 லட்சம் மூட்டைகள் அதிகரித்து, 1.45 கோடி மூட்டைகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில், அந்நாட்டின் அரபிகா வகை காபி உற்பத்தி 71 லட்சம் மூட்டைகள் குறைந்து, 3.47 கோடி மூட்டைகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், வியட்நாம் நாட்டில், சாதகமான பருவ நிலையால், இவ்வாண்டு, அந்நாட்டின் காபி உற்பத்தி 19 லட்சம் மூட்டைகள் அதிகரித்து, 2.06 கோடி மூட்டைகளாக உயரும் என, அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் காபி உற்பத்தி, நடப்பு பருவத்தில், 2.88 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என, அமெரிக்க வேளாண் துறை மதிப்பிட்டுள்ளது. அதேசமயம், இந்திய காபி வாரியம், நாட்டின் காபி உற்பத்தி 3 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என தெரிவித்துள்ளது. ஒட்டு மொத்த அளவில், கடந்த ஆண்டை விட, நடப்பு பருவத்தில், இந்தியாவின் காபி உற்பத்தி சற்று குறைவாகவே இருக்கும் என தெரிகிறது.

**கரீப் பருவத்தில் விதைப்பு பணிகள் தீவிரம்**

ஜூலை 03,2011,01:46



புதுடில்லி : கரீப் பருவத்திற்கான (ஜூன்- அக்டோபர்) கரும்பு, பருத்தி, நெல், சணல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளின் விதைப்புப் பணிகளில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கரீப் பருவத்தையொட்டி, சாகுபடிக்கான விதைப்புப் பணிகள், வழக்கமாக ஆண்டுதோறும், மே முதல், ஜூலை மாதம் வரை நடைபெறும்.

இவ்வாண்டு நாடு முழுவதும், கரீப் பருவ விதைப்புப் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். சென்ற 24ம் தேதி நிலவரப்படி, நாட்டில், 50.94 லட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. பருத்தி

பயிரிடப்பட்ட பரப்பளவு 26.62 லட்சம் எக்டேராக உள்ளது.நெல் 19.09 லட்சம் எக்டேரிலும், சணல் 8.62 லட்சம் எக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளன.

இதே காலத்தில், எண்ணெய் வித்துக்களை 7.43 லட்சம் எக்டேரிலும், பருப்பு வகைகளை, 3.77 லட்சம் எக்டேர் பரப்பளவிலும் விவசாயிகள் பயிரிட்டுள்ளதாக, வேளாண் அமைச்சகத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***கூடலூரில் 'ஸ்டார் புரூட்' சீசன் தொடக்கம்***



கூடலூரில் ஒரு விவசாயி தோட்டத்தில் காய்த்துள்ள 'ஸ்டார் புரூட்' பழங்கள்.

*கூடலூர், ஜூலை.4–*
*கூடலூரில் ஸ்டார் புரூட் சீசன் தொடங்கியுள்ளது. விவசாயிகள் 'ஸ்டார் புரூட்' பயிரிடுவதில் அதிக அக்கறை செலுத்த தொடங்கியுள்ளனர்.*
*தேயிலைக்கு போதிய விலை கிடைக்காமல்*
*நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் முக்கிய இடத்தை வகித்து வருகிறது. கடந்த*

சில ஆண்டு களாக பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். சில நேரங்களில் ஏற்ற இறக்க நிலையிலேயே பச்சை தேயிலை விலைகள் காணப்படுகின்றன.

இதனால் தேயிலை விவசாயத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் வேறு பயிர்களை பயிரிடுவதை விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கூடலூர் பகுதியில் மலைப் பகுதிகளில் விளையும் பயிர் களுடன், சமவெளி பிரதேச பயிர்களும் விளைகின்ற பூமி யாகும். இதனால் இருவகை காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

'ஸ்டார் புரூட்' விளைச்சல்

கூடலூர் பகுதியில் தற்போது பலத்த மழை பெய்து வருகின்றன. இதனால் குளிர் காலநிலை நிலவி வருகிறது. இந்த நிலையில் 'ஸ்டார் புரூட்' எனும் பழங்கள் தற்போது கூடலூர் பகுதியில் அதிகளவு விளைந்துள்ளன. இதனால் மார்க்கெட்டுகளுக்கு ஸ்டார் புரூட் பழங்கள் அதிகளவு விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து விவசாயி கிருஷ்ணன் என்பவர் கூறியதாவது:– விவசாயிகள் தேயிலையை மட்டும் எதிர் பார்க்காமல் பழ வகை மரங் களை நட்டாலே ஆண்டு தோறும் கணிசமான வரு வாயை பெற முடியும்.

ஊடுபயிர்

நீலகிரி மாவட்டத்தில் விளையும் பழங்களுக்கு சமவெளி பகுதிகளில் நல்ல விலை கிடைக்கிறது. குறிப்பாக பிளம்ஸ், மங்குஸ்தான், ஸ்ட்ரா பெர்ரி, வாட்டர் புரூட், ஆரஞ்சு பழங்களுக்கு கிராக்கி உள்ளது. தற்போது கூடலூர் பகுதியில் 'ஸ்டார் புரூட்' பழ சீசன் தொடங்கி உள்ளது.

இதற்கு ஓரளவு விலை கிடைக்கிறது. அரசு விவசாயி களை பழ மரங்கள் நடவு செய்ய ஊக்கம் அளிக்க வேண்டும். மானிய விலையில் பழ மரக்கன்றுகளை விவசாயி களுக்கு தர வேண்டும்.

மேலும் பழ வகை மரங் களுக்கு இடையே ஊடுபயிராக பல் வேறு காய்கறிகளை பயிரிட்டு குறிப்பிட்ட காலத்தில் சொற்ப வருமானங் களை பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி ரோஜா பூங்கா நுழைவு வாயில் அருகே பூத்து குலுங்கும் பச்சை நிற ரோஜா மலர்கள்.

### ஊட்டி ரோஜா பூங்காவில்

# சுற்றுலா பயணிகளை கவரும் பச்சை ரோஜா

ஊட்டி, ஜூலை.4-

ஊட்டி ரோஜா பூங்காவில் பூத்து குலுங்கும் பச்சை நிற ரோஜா அனைவரையும் கவர்கிறது.

**3 மாநில எல்லை**

அமைதியான மாவட்டமாக விளங்கும் நீலகிரியின் தலைநகரமாக ஊட்டி விளங்குகிறது. மாவட்டத்தில் குற்றங்கள் மிக குறைந்த அளவில் நடப்பதால் அனைத்து தரப்பு மக்களும் ஊட்டிக்கு அச்சமின்றி வருகின்றனர்.

மேலும் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய 3 மாநிலங்களின் எல்லை பகுதியில் அமைந்து உள்ளதால் 3 மாநில மக்களும் உல்லாச சுற்றுப்பயணமாக ஊட்டிக்கு வருகின்றனர். வருடந்தோறும் 22 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் இங்கு வருகின்றனர்.

**100-வது மலர்கண்காட்சி**

நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் இடமாக ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா உள்ளது. இதற்கு அடுத்து படகு இல்லம் மற்றும் ரோஜா பூங்கா ஆகியவை திகழ்கிறது.

ஊட்டி ரோஜா பூங்கா சர்வதேச புகழ்பெற்ற பூங்காவாக உள்ளது. இந்த பூங்காவை 1995-ம் ஆண்டில் இன்றைய தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா புகழ்பெற்ற 100-வது ஊட்டி மலர் கண்காட்சியை முன்னிட்டு ரோஜா பூங்காவை திறந்து வைத்தார்.

**பச்சை ரோஜா**

இந்த பூங்காவில் 3 ஆயிரத்து 500 ரோஜா ரகங்களை சேர்ந்த 26 ஆயிரம் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளது. இதில் காதலர் ரோஜா, குயின் எலிசபெத் ரோஜா, நேரு ரோஜா, தமிழக முதல்வர் பெயரில் ஜெ.ஜெயலலிதா ரோஜா ஆகிய ரகங்கள் குறிப்பிடதக்கது.

இந்த ரோஜா செடிகளில் வெள்ளை, பச்சை, கருப்பு, சிவப்பு, இளம் சிவப்பு , நீலம், மஞ்சள், ஊதா உள்ளிட்ட பல்வேறு வண்ணங்களில் ரோஜா மலர்கள் பூக்கின்றன. இதில் அபூர்வ வகையை சேர்ந்த பச்சை ரோஜாவும் உள்ளது. இந்த பச்சை ரோஜா வீடுகளில் வளர்த்தால் குடும்பம் பசுமையாக இருக்கும் என்று பலர் நம்புகின்றனர்.

வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நீலம், இளம் சிவப்பு ரோஜாக்களுடன் பச்சை ரோஜா வீட்டில் வளர்த்து காலையில் எழுந்து இந்த மலர்களை பார்த்தால் மன அழுத்தம் நீங்கும். மனதில் மகிழ்ச்சி இருக்கும் என ஊட்டி பகுதியில் ரோஜா மலர் வளர்த்துள்ள பலர் கூறுகின்றனர். தற்போது ரோஜா பூங்காவின் நுழைவு வாயில் பகுதியில் பச்சை ரோஜா கொத்து கொத்தாக பூத்து குலுங்குகிறது. இதனை சுற்றுலா பயணிகள் மிகுந்த ஆர்வத்துடனும், ஆச்சரியத்துடனும் பார்வையிட்டு செல்கின்றனர்.



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பூங்கா ஊழியர்கள்.

## 2–வது சீசனிற்கான பணிகள் தீவிரம்:

# பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிப்பு

ஊட்டி, ஜூலை.4–

நீலகிரி மாவட்டத்தில் 2–வது சீசனிற்கான பணிகள் தற்போது தொடங்கி உள்ளது. பூங்காக்களில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் எடுக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

### சீசன்

நீலகிரி மாவட்டத்தில் 2 சீசன்கள் நடைபெறுகிறது. இதில் கோடை காலமான ஏப்ரல்,மே மாதங்கள் முக்கிய சீசன் காலங்களாகும். இந்த சீசன் காலத்தில் தமிழகம் முழுவதும் மட்டுமின்றி வெளி மாநிலங்களை சேர்ந்தவர்களும் அதிகளவு வருகின்றனர். ஆண்டின் அக்டோபர், நவம்பர் மாதங்கள் 2–வது சீசன் நடைபெறுகிறது. இந்த மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் குளிர் மிக அதிகமாக இருக்கும். இந்த சீசன் காலத்தில் வட மாநிலங்களை சேர்ந்த புதுமண தம்பதிகள் தான் அதிகளவு வருகின்றனர்.

### மலர்கண்காட்சி

கோடை காலங்களில் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. மேலும் மலர் மாடங்களில் சுமார் 10 ஆயிரம் தொட்டிகளில் பூத்து குலுங்கும் மலர்கள் சுற்றுலா பயணிகள் பார்வைக்கு அடுக்கி வைக்கப்படும். பூங்கா முழுவதும் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்படும். தற்போது 2–து சீசனிற்கும் இது போன்று மலர் மாடத்தில் மலர்செடிகள் அடுக்கி வைக்கப்படுகிறது. தற்போது சீசன் முடிந்து உள்ள நிலையில் மலர் செடிகள் பூத்து ஓய்ந்து விட்டது.



விதைகளை சுத்தபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள்.

### சேகரிப்பு

இந்த மலர் செடிகளில் இருந்து 2–வது சீசனுக்கு மலர் செடிகளை நடவு செய்வதற்கு வசதியாக விதைகள் சேகரிக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

இது குறித்து பூங்கா உதவி இயக்குனர் பிரகாசம் கூறியதாவது:-

பூங்காவில் சீசனுக்கு நடவு செய்யப்பட்ட மலர் செடிகள் பூத்து ஓய்ந்து விட்டது. இந்த செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. குறிப்பாக ஜினியா, ஸ்வீட் வில்லியம், சால்வியா, சப்னேரியா, அஜிரம், சைனா கிளாசம், டல்பீனம், ஆஸ்டர், கேலன்டுலா, பிளாக்ஸ், உள்ளிட்ட மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கப்படுகிறது.

இந்த விதைகள் சீசன் காலங்களில் பூங்காக்களில் நடவு செய்யப்படும். மேலும் 2–வது சீசனிற்காக பூங்காவில் விரைவில் மலர்செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட உள்ளது. பூங்காவின் தேவைக்கு போக மீதியுள்ள விதைகள் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

# சோயா எண்ணெய் இறக்குமதிக்கு ஏலம்

பதிவு செய்த நாள் 7/4/2011 1:5:5



புதுடெல்லி: இறக்குமதி செய்யப்படும் 3,000 டன் சோயா எண்ணெய் ஏலத்துக்கான விண்ணப்பங்கள் பெறப்படுவதாக பிஇசி நிறுவனம் அறிவித்துள்ளது. அரசு வர்த்தக நிறுவனமான பிஇசி உடனடியாக 3,000 டன் சோயா எண்ணெய் இறக்குமதி செய்கிறது. அதை உள்நாட்டில் சப்ளை செய்வதற்காக ஏலம் கோருபவர்கள் வரும் 8ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். அனைத்து விண்ணங்களும் பெற்றவுடன், கடைசி நாளான அன்றைய தினமே ஏல ஒப்பந்தம் அறிவிக்கப்படும் என்று பிஇசி வெப்சைட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சோயா எண்ணெய் அர்ஜென்டினா மற்றும் பிரேசிலில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.